திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் எல்லாபுரம் வடக்கு ஒன்றிய திமுக சார்பில் இளைஞர் அணி எழுச்சி நாள் முன்னிட்டு பெரியபாளையம் பேருந்து நிலைய அருகில் உணவு வழங்கும் நிகழ்ச்சி ஒன்றிய கழக செயலாளர் எல்லாபுரம் ஜெ.மூர்த்தி தலைமையில் நடைபெற்றது. இதில் மாவட்ட கழக பொறுப்பாளர் வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ்ராஜ் கலந்து கொண்டு 1000 பேருக்கு அறுசுவை பிரியாணி மற்றும் இனிப்பு வழங்கினார். உடன் மு.பகலவன், கே.வி.ஜி.உமா மகேஸ்வரி, மு.கதிரவன், ஏ.வி.ராமமூர்த்தி, பா.செ.குணசேகரன், கே.எஸ்.மணி உள்பட நிர்வாகிகள் உள்ளனர்.

கி.நாகலிங்கம் – பி.வினோத் பங்கேற்பு! துணை முதல்வர் பிறந்தநாள் விழா

திரு.வி.க. நகர் 76 'அ' வட்டத்தில் இனிப்பு!

வட்டச் செயலாளர்கள் எஸ்.சசிகுமார் – எஸ்.வெங்கடேசன் வழங்கினர்!

சென்னை, நவ. 29- கழக இளைஞர் அணிச் செயலாளர் - துணை முதல்வர் - இளந்தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளையொட்டி நவ.27 அன்று திரு.வி.க.நகர் 76 'அ' வட்டத்தில் கழகக் கொடியேற்றி இனிப்பு வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் திரு.வி.க.நகர் தெற்கு பகுதி 76வது வட்டக் கழகச் செயலாளர் எஸ்.சசிகுமார், திரு.வி.க.நகர் தெற்கு பகுதி 76(அ) வட்ட கழக செயலாளர் எஸ்.வெங்கடேசன் ஆகியோர் இனிப்பு வழங்கினர்.

இந்நிகழ்வில் சென்னை கிழக்கு மாவட்ட பிரதிநிதி கி.நாகலிங்கம் 76(அ) வட்ட துணை செயலாளர் திருமதி சத்யா நாகலிங்கம் திரு.வி.க.நகர் தெற்கு பகுதி 76வது வட்ட பகுதி பிரதிநிதி பி.வினோத் 76(அ) வட்ட பொருளாளர் ஆர்.ஜான்(எ) ரவி, தகவல் தொழில்நுட்ப அணி 76(அ) வட்ட அமைப்பாளர் எம்.அசோக்குமார், 76(அ) வட்ட கழக செயல்வீரர்கள் ஏ.இருதயராஜ், ஏ.நெல்சன்ஜான், என்.சி.வெங்கடேசன், ரகு, விமல்ராஜ், ஏ.குமார், ஏ.அஜய் ஆகியோர் பங்கேற்றனர்.

சென்னை வடக்கு மாவட்டம் பெரம்பூர் வடக்கு பகுதி 34 வது வட்டத்தில் வட்டகழக செயலாளர் கே.வி.ராஜன் மற்றும் கழக முன்னோடி என்.கே.மணி ஏற்பாட்டில் இளைஞர் எழுச்சி நாளை முன்னிட்டு பொதுமக்களுக்கு உணவு – இனிப்பினை மாவட்ட பொறுப்பாளர் பெரம்பூர் சட்டமன்ற உறுப்பினர் ஆர்.டி.சேகர் வழங்கினார். உடன் பகுதிகழக செயலாளர் அ.முருகன், த.யுவநாதன், சே.சுமதி, பூமிநாதன், தம்பையா, வெங்கடேஷ்வரன், தினேஷ், போ.முக்கேஷ், நீலமோகன், ஜெய்குமார், கோபி, ரமேஷ், ராஜகோபால், நரசிம்மன், மோகன், ராஜா, வசந்தி, வேளாங்கண்ணி, தென்னரசு, மாஸ்டர் டச் குமார், நாதன், சங்கர், ராஜேந்திரன், விக்டர், பிரியா, மெய்யப்பன், கௌஸ், அக்பர் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி

"அன்னம் தரும் அமுதகரம்" 282 வது நாள்!

திரு.வி.க.நகர் வடக்கு பகுதியில் உணவு வழங்கப்பட்டது!

சென்னை,நவ.29- தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு "அன்னம் தரும் அமுதக்கரங்கள்" மாபெரும் திட்டத்தின் 282 ஆம் நாளான - கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்த நாளை முன்னிட்டு நேற்று (28.11.2025), திரு.வி.க நகர் வடக்கு பகுதி: 1) வட்டம் 74 அ, வாழைமா நகர், கிருஷ்ணதாஸ் சாலை சந்திப்பு, ஓட்டேரி. 2) வட்டம் 71, நெல் வயல் சாலை, பெரம்பூர், சென்னை ஆகிய பகுதிகளில் மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு வழிகாட்டுதல் படி தமிழ்நாட்டு நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தரமாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம். தமிழ் நாடு போராடும், தமிழ் நாடு வெல்லும் - இதுதான் ஒரே இலக்கு!" என்ற உறுதி மொழியை ஏற்று பொது மக்களுக்கு காலை உணவு வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் சென்னை பெருநகர மேயர் பிரியாராஜன், ப.தாயகம் கவி எம்.எல்.ஏ, செ.தமிழ் வேந்தன். புனிதவதி எத்திராஜன், எம்.சரவணன், பி.உதயசங்கர், இரா. வீரமணி, நா.துலுக்காணம், எம்.பெரோஸ்கான், கா. ராஜ்முகமது, திரு.வி.க.நகர் வடக்கு / தெற்கு வட்ட கழக செயலாளர்கள்: பரிமளா சுரேஷ்பாபு, மா.ருத்ரமூர்த்தி, எம்.ஏ.டீக்கா, எம்.இசட்.அபோய், எஸ்.புஷ்பராஜ், ஜி.கிருஷ்ணகுமார், எம்.தமிம், பொல்லு டி.சுரேஷ்குமார், வி.க.வெங்கடேசன், எஸ்.சசிகுமார், பா.பி.தாஸ், எஸ்.வெங்கடேசன். இத்திட்ட ஒருங்கிணைப்பாளர்கள்: சொ.வேலு, S.முரளி, பெரம்பூர் R.ராஜன், K.R.அபரஞ்சி, அசோக் ஜெயின், P.விஜயகுமார், ம.அசோக்குமார், L.சம்பத்குமார், க.பா.பிரதீப்குமார் மற்றும் கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

இளைஞர் எழுச்சி நாளை முன்னிட்டு முடிச்சூர் ஊராட்சியை சேர்ந்த மாரியம்மாள் முனுசாமி ஆகிய பயனாளிகளுக்கு தமிழ்நாடு அரசின் ரூபாய் 3 லட்சத்து 16 ஆயிரம் மதிப்பீட்டில் கலைஞர் கனவு இல்லத்தை தாம்பரம் மாநகர செயலாளர் எஸ்.ஆர்.ராஜா.எம்.எல்.ஏ திறந்து வைத்து பயனாளிகளுக்கு வழங்கியும் கழக தோழர்களுடன் உணவு அருந்தினார். உடன் துணை தலைவர் விநாயகமூர்த்தி, முன்னாள் தலைவர் ப. தாமோதரன், இளைஞர் அணி செயலாளர் சுனில் மேத்யூ, லோகநாதன், உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

தலைமை; கோல்டு பிரகாஷ்! ப, குணாளன் – என் சந்திரன் எம்.சி, வரவேற்புரை! காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட இளைஞர் அணி சார்பில்

500 இளைஞர் அணி நிர்வாகிகளுக்கு வெண் சீருடை - விளையாட்டு உபகரணப் பொருட்கள்!

அமைச்சர் தா.மோ. அன்பரசன் வழங்குகிறார்! ஆர். எஸ்.பாரதி – மீ.ஆ. வைத்தியலிங்கம் பங்கேற்பு!

சென்னை,நவ.29- காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட திமுக இளைஞரணி சார்பில் நவம்பர் 27 இளைஞர் எழுச்சி நாள் - துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாளை முன்னிட்டு 500 இளைஞர் அணி நிர்வாகிகளுக்கு வெண் சீருடை மற்றும் விளையாட்டு உபகரண பொருட்கள் வழங்கும் நிகழ்ச்சி காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கோல்டு டி .பிரகாஷ் தலைமையில் இன்று (29.11.2025 சனிக்கிழமை) மாலை 5 மணிக்கு மாவட்ட அலுவலகம் ஆலந்தூர் (கத்திப்பாரா ஜோதி திரையரங்கம் அருகில்) நடைபெறுகிறது.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட செயலாளர் - அமைச்சர் தா.மோ. அன்பரசன் 500 இளைஞர் அணி நிர்வாகிகளுக்கு நல உதவிகள் வழங்குகிறார்.

விழாவில் பகுதி செயலாளர்கள் ஆலந்தூர் ப. குணாளன், என். சந்திரன் எம்.சி., டி. பாபு, ஏ. வந்தே மாதரம், ஜிகே விவேகானந்தன் (எ) ரவி ஆகியோர் வரவேற்கின்றனர்.

வீ. விஜயகுமார், டி கே கமலக்கண்ணன், கோ.ஜானகிராமன், ப. ராமமூர்த்தி, கே மணிகண்டன், சத்திய பிரபு, ச. பிரபு, ச. ராஜேஷ், பீ. கார்த்திக், எம்.எஸ்கே. இப்ராஹிம், ஆர்.டி. பூபாலன், கீதா ஆனந்தன், இரா. பாஸ்கரன், எம்.சதீஷ், சாய் ஜெயகாந்த் பாரதி, பேராசிரியர் எல். பிரபு ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இதில் ஆலந்தூர் வடக்கு, தெற்கு பகுதி நிர்வாகிகள், பிரதிநிதிகள், அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் உள்ளிட்ட அனைவரும் பங்கேற்கின்றனர்.

விழாவில் கலந்து கலந்து கொள்ளும் அனைவரையும் கலாநிதி குணாளன், கோ.பிரவீன்குமார், எஸ். ஜெனார்த்தனன்,

எம்..விக்னேஷ், சுனில் பால்ராஜ், சுனில் மேத்யூ, வெ.பிரகாஷ், ஏ.வினோத் எம்.பி.மகேஷ், கி.கோகுல் குமார், டி.கே.வி.பிரபாகரன், ஆகியோர் வரவேற்கின்றனர்.

கோ. ஜானகிராமன் தலைமை : இ. ஜோசப் அண்ணாதுரை முன்னிலை:

பல்லாவரம் சட்டமன்றத் தொகுதியில் முத்தமிழறிஞர் கலைஞர் நூலகம் திறப்பு விழா!

மாவட்டச் செயலாளர் – அமைச்சர் தா.மோ அன்பரசன் திறந்து வைக்கிறார்!

இ. கருணாநிதி எம்.எல்.ஏ, எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ, பிரபு கஜேந்திரன் பங்கேற்பு!

பல்லாவரம் நவ- 29 காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் பல்லாவரம் சட்டமன்றத் தொகுதி திமுக இளைஞரணி சார்பாக கழக இளைஞர் அணி செயலாளர் மாண்புமிகு துணை முதலமைச்சர் இளந் தலைவர் உதயாநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு முத்தமிழ் அறிஞர் கலைஞர் நூலக திறப்பு விழா இன்று 29- 11-2025 சனிக்கிழமை மாலை 5 மணி அளவில் பழைய பல்லாவரம் சாரா நகர் மெயின் ரோட்டில் அமைக்கப்பட்டுள்ள நூலகத்தை மாவட்டக் கழகச் செயலாளர் மாண்புமிகு அமைச்சர் தா.மோ. அன்பரசன் அவர்கள் திருக்கரங்களால் திறந்து வைக்கிறார் இந்நிகழ்ச்சிக்கு மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் கோ. ஜானகி ராமன் தலைமை தாங்குகிறார்.

பல்லாவரம் மண்டலத் தலைவர் பல்லாவரம் வடக்கு பகுதி கழகச் செயலாளர் இ. ஜோசப் அண்ணாதுரை வரவேற்புரை நிகழ்த்துகிறார் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கோல்ட் டி. பிரகாஷ், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் பேராசிரியர் பிரபு, மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் தையூர் விஜயகுமார் டி. கே. கமலக்கண்ணன் ப.ராமமூர்த்தி கே.மணி கண்டன் தாம்பரம் மாநகர அமைப்பாளர் பி. கே. ஏ. சத்திய பிரபு துணை அமைப்பாளர்கள் ச. பிரபு ஜே. இன் சாமாம் வீ. கார்த்திக், சா. ராஜேஷ், வே. சிவ சுப்பிரமணியன் பகுதி இளைஞரணி அமைப்பாளர்கள் சா. சாகுல் ஹமீது லோ. டில்லி பாபு சே. அமுதராஜ் ஞா. பிரபு புனித தோமையார் மலை ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் சுனில் மேத்யூ துணை அமைப்பாளர்கள் ஆர். ஐயப்பன் என். கார்த்திக் எம். சி., எஸ் பிரசாத் பல்லாவரம் வடக்கு பகுதி கழக நிர்வாகிகள் நிர்வாகிகள் ச. சிவக்குமார் இரா. சேகர் வ. முத்து பி. அம்பிகா எஸ். நெடுஞ்செழியன் எம். சி. ஜி. கருணாநிதி எம். இளங்கோ மீசை கே. ராதா ஐ. கஜேந்திரன் சே. கன்னியப்பன் பல்லாவரம் வடக்கு பகுதி இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் முரசொலி ராஜன் ஆர். கௌதம் பிரபு எஸ். சதீஷ்குமார் ஜி. வி. விஜயகுமார் துரை சம்பத் டி .சீனிவாசன் தீபக் கண்ணன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

மேலும் மாவட்டக் கழகத் துணைச் செயலாளர் இ. கருணாநிதி எம்.எல்.ஏ தாம்பரம் மாநகரச் செயலாளர் எஸ். ஆர். ராஜா மாநில இளைஞரணி துணைச் செயலாளர் பிரபு கஜேந்திரன் தாம்பரம் மாநகராட்சி மேயர் க. வசந்தகுமாரி துணை மேயர் கோ. காமராஜ் மாநில தகவல் தொழில்நுட்ப துணைச் செயலாளர் அ. தமிழ்மாறன் பம்மல் மண்டல தலைவர் பம்மல் தெற்கு பகுதி கழகச் செயலாளர் வே. கருணாநிதி பகுதி கழகச் செயலாளர்கள் த. ஜெயக்குமார் இ.எஸ். பெர்னார்ட் ஏ. கே. கருணாகரன் புனித தோமையார் மலை ஒன்றிய செயலாளர் ஜி.கே .ரவி என்கிற விவேகானந்தன் மாநில தகவல் தொழில் துணைச் செயலாளர் என். நவீன் பொதுக்குழு உறுப்பினர் மு. ரஞ்சன் மாவட்ட கழகப் பிரதிநிதிகள் க. ரமேஷ் த. ராஜாராமன் கே. தனசேகரன் மாவட்ட அணிகளின் துணை அமைப்பாளர்கள் வே. தாமோதரன் மா. சந்திரகேசவன் எம் .ஐ டி. எஸ். விஜய், பா. ராஜா, ச. ரஞ்சித், மாநகரத் துணை அமைப்பாளர்கள் எம். இளவரசன் என்.எஸ். மதன கோபால் ,வீடியோ ஹரி, எல்.ஆர். சதீஷ்குமார், ஜூனியர் அதிசயராஜ், ஜெ. பிரசன்னா, கே. கேசவன் ஆர் மணிமேகலை, டி. ராணி, எச். எம். ஹரி , பல்லாவரம் வடக்கு பகுதி வட்டக் கழக செயலாளர்கள் மாமன்ற உறுப்பினர்கள் தே. இளங்கோவன், பி. பரமசிவம், பி. ராஜ்குமார், டி.வி.ராஜா, எம்.சி.,எம். அந்தோணி, தமிழ் கோ. ரங்கநாதன், லதா சிவக்குமார், ரேணுகா தேவி பரமசிவம், மங்கையர் திலகம் ராஜ்குமார், பிரேமலதா பண்டேரியநாதன், மற்றும் பல்லாவரம் தெற்கு செம்பாக்கம் வடக்கு பம்மல் வடக்கு பம்மல் தெற்கு புனித தோமையார் மலை ஒன்றியம் ஆகிய பகுதிகளை செய்து சேர்ந்த பகுதி கழக நிர்வாகிகள் வட்டக் கழக செயலாளர் மாமன்ற உறுப்பினர்கள் இளைஞர் அணி மாணவர் அணி மகளிர் அணி உட்பட அணிகளின் நிர்வாகிகள் 17-வது வட்டக் கழக நிர்வாகிகள் ஆகியோர் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளார்கள் .

பல்லாவரம் வடக்கு பகுதி கழக இளைஞர் அணி செயலாளர் சரத் வெங்கடேசன் 17-வது வட்டக் கழக செயலாளர் டி. எச். பிரான்சிஸ் பால் ஆகியோர் நன்றி உரை கூற உள்ளார்கள்.

துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாளை முன்னிட்டு சென்னை தெற்கு மாவட்ட பொருளாளர் வேளச்சேரி எஸ்.பாஸ்கரன் எம்.சி தலைமையில் வழக்கறிஞர் சரண் ஏற்பாட்டில் 175 வது வட்ட செயலாளர் க.பாரதிதாசன், எஸ்.சக்திவேல் 175(அ) செயலாளர் முன்னிலையில் கழக உடன்பிறப்புகளுடன் வேளச்சேரி ஞானஒளி முதியோர் இல்லத்தில் மதிய அறுசுவை உணவு வழங்கப்பட்டது.உடன் கோபாலகிருஷ்ணன் க.பாலாஜி, என்.முருகன், எஸ்.விநாயகமூர்த்தி, அலெக்ஸ்,ஆட்டோ முருகன், நாராயணன், பூங்கொடி, பா.மோகன்ராஜ், தனசேகர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

இளைஞர் எழுச்சிநாளை முன்னிட்டு காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம் அச்சரப்பாக்கம் வடக்கு ஒன்றியத்தில் மொரப்பாக்கம் அரசு மேல்நிலைப் பள்ளியில் மாணவரணி அமைப்பாளர் கூடலூர் வி.கே. நித்திஷ் குமார் ஏற்பாட்டில் மாணவர்களுக்கு அறிவு சார்ந்த போட்டிகள் வைத்து அனைத்து மாணவர்களுக்கும் கைகடிகாரம் மற்றும் இனிப்புகள் விளையாட்டு உபகரணங்களை அச்சரப்பாக்கம் வடக்கு ஒன்றிய கழக செயலாளர் ஜி. தம்பு வழங்கினார். இதில் இளங்கோ சரவணன், ரஞ்சித், கார்த்திக் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.